# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ).

************

முறையீட்டு மனு எண்: 0904/2016/ந

ஆணை எண்: 093/2017

நாள்: 03/05/2017

| | |
|---|---|
| 31-08-2016 நாளிட்ட "தினமலர்" நாளிதழ் செய்தி | முறைமன்ற நடுவத்தால் தாமாக முறையீடாகப் பதிவு செய்யப்பட்டது |
| நகராட்சி ஆணையர், தாம்பரம் நகராட்சி. | எதிர் மனுதாரர் |

## ஆணை

31.08.2016 நாளிட்ட "தினமலர்" நாளிதழில் வகுப்பறையை குடோன் ஆக மாற்றியதால் விபரீதம் - தவறுக்கு என்ன தண்டனை ? என்ற குறுந் தலைப்புகளில் வெளிவந்த செய்தியினை 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 7-ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி இம்முறைமன்ற நடுவம் தாமாகவே முன்வந்து முறையீடாகப் (எண்.0904/2017) பதிவு செய்து உரிய விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டதன் அடிப்படையில் கீழ்க்கண்டவாறான ஆணையினை பிறப்பிக்கிறது:-

தாம்பரம் நகராட்சி சேலையூர் துவக்கப்பள்ளியில் பிளீச்சிங் பவுடர் மூட்டைகள் இருப்பு வைக்கப்பட்டிருந்ததால் ஏற்பட்ட தீ விபத்து குறித்த மேற்படி செய்தி தொடர்பான நிலை மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தான அறிக்கையினை தாக்கல் செய்யுமாறு தாம்பரம் நகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை அசல் மனு எண்.0904/16/ந நாள்: 01.09.16ன் மூலம் உத்தரவிடப்பட்டது.

நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.7564/2016/எச்.1 நாள்:19.09.16 பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் பொது சுகாதாரப் பணிக்கு கிருமி நாசினியாக பயன்படுத்திட வேண்டி 40.50 மெடன் (1620 மூட்டைகள்) தமிழ்நாடு பொது சுகாதார துறையால் கொண்டு வரப்பட்டதெனவும் சேலையூர் நகராட்சி தொடக்கப்பள்ளியில் இருப்பறையாக பயன்படுத்தப்பட்டு வந்த ஒதுக்குப்புற கட்டிட அறையில் சேகரித்து வைக்கப்பட்டிருந்ததெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி பிளீச்சிங் பவுடரில் பயன்படுத்தியது போக 9.20 மெடன் (368 மூட்டைகள்) நகராட்சி பொது சுகாதாரப் பணிகளுக்கென இருப்பு வைக்கப்பட்டிருந்ததெனவும் இருப்பறையின் காற்றழுத்தம் காரணமாகவோ, வெப்பத்தின் காரணமாகவோ தீ விபத்து ஏற்பட்டுள்ளதெனவும், துரிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது எனவும் ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், சம்பந்தப்பட்ட துப்புரவு ஆய்வாளர் மற்றும் துப்புரவு அலுவலரிடம் விளக்கங்கள் கோரப்பட்டதெனவும், வெள்ள நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாகவும், தினசரி பயன்படுத்தப்பட்டு வந்த பிளீச்சிங் பவுடரில் வேதியியல் வினை காரணமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளதெனவும் இனி இதுபோன்று நடைபெறா வண்ணம் பொறுப்பாக செயல்படுவதாகவும் துப்புரவு அலுவலர் தனது விளக்கங்களுடன் உறுதி அளித்துள்ளாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் 27.09.16 அன்று புலவர். ஏ.கு.மணி, இரும்புலியூர் எனப் பெயரிடப்பட்ட புகார் மனு ஒன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு வரப்பெற்றது. அதில் தாம்பரம் நகராட்சி துப்புரவு அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் மீது மேற்படி நிகழ்வு குறித்து சில புகார்கள் எழுப்பப்பட்டுள்ளது. மேற்படி புகார் மனு குறித்து நகராட்சி ஆணையரது அறிக்கை கோரப்பட்டதுடன், சம்பந்தப்பட்ட மனுதாரரை 02.11.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தெரிவித்து அழைப்பாணை (அ.ம.எண்.0904/6/13-2 நாள்:29.09.2016) அனுப்பப்பட்டது. அதன்படி 02.11.16 அன்று ஆஜரான புலவர் ஏ.கு.மணி என்பவர் மேற்படி மனுவிலுள்ள கையொப்பம் தன்னுடையதல்ல எனவும் தான் அந்த மனுவை அனுப்பவில்லை எனவும் உறுதிபட தெரிவித்து வாக்குமூலம் அளித்துள்ளார். இருப்பினும் இப்பொருள் குறித்து விசாரிக்கும் பொருட்டு, 23.11.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தாம்பரம் நகராட்சி ஆணையர், திரு. P. செல்வராஜ் துப்புரவு அலுவலர், திரு. என்.சிவக்குமார், துப்புரவு ஆய்வாளர் ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

23.11.2016 அன்று விசாரணைக்கு ஆஜரான துப்புரவு அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் இரசாயன மாற்றங்களால் தீ விபத்து ஏற்பட்டதெனவும், தற்போது இருப்பு முழுமையாக அகற்றப்பட்டுவிட்டதெனவும் தெரிவித்து தங்களது வாக்குமூலங்களை சமர்ப்பித்துள்ளனர்.

இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அசல் மனு எண்.0904/6/ந நாள்:19.12.16ன்படி 27.12.16 அன்று நிர்ணயிக்கப்பட்டிருந்த விசாரணைக்கு ஆஜரான தாம்பரம் நகராட்சி ஆணையரால், துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோரிடம் பெறப்பட்டுள்ள விளக்கங்கள் மீதான இறுதியாணையினை வழங்கி அறிக்கை சமர்ப்பிப்பதாக உறுதி அளிக்கப்பட்டது. அதன்படி தாம்பரம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.7564/2016/சி1 நாள்:20.01.17ன்படி இறுதி அறிக்கை 30.01.17 அன்று வரப்பெற்றது. அதில் துப்புரவு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகியோரது பதிலறிக்கைகளை ஆய்வு செய்து அவர்களது செயல்பாட்டினை கருத்தில் கொண்டு இதுவே முதலும் கடைசியுமாக கருதி எச்சரித்து இறுதி ஆணை வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி எச்சரிக்கை ஆணையின் நகலும் இம்முறைமன்ற நடுவ பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எனவே, மேற்படி விசாரணைகள், வாக்குமூலங்கள் மற்றும் விளக்க அறிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, நகராட்சி ஆணையரது அறிக்கை ஏற்று மேல் நடவடிக்கையினை கைவிட இம்முறைமன்ற நடுவ முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017-ம் ஆண்டு மே திங்கள் 4-ம் நாள் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

ஒம்/-
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்:

1. நகராட்சி ஆணையர்,
   தாம்பரம் நகராட்சி,
   தாம்பரம், சென்னை 600 045.

2. திரு. பி. செல்வராஜ்,
   துப்புரவு அலுவலர், பல்லவபுரம் நகராட்சி,
   சென்னை.

3. திரு. சிவக்குமார்,
   துப்புரவு ஆய்வாளர், தாம்பரம் நகராட்சி,
   தாம்பரம், சென்னை – 600 045.